<u>4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை</u>

சாட்சியின் சாட்சியம் திரு. **C.** ராஜலிங்கம், பி.ஏ., பி. எல்., 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

அ.வ.எண். **493 / 2021** நாள்: **08.04.2025** வா.சா.**1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **ஜெகஜோதி** | தொழில் | : விவசாயம் |
| த/பெ | : செல்லதுரை பிள்ளை | கிராமம் | : உடுமலைபேட்டை டவுண் |
| வயது | : 65 | தாலுகா | : உடுமலைபேட்டை |
| | | மாவட்டம் | : திருப்பூர் |

<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, முதல் விசாரணை -</u>

நான் இந்த வழக்கில் வாதி ஆவேன். இந்த வழக்கில் எனது சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அதை பதிவு செய்து கொள்ள வேண்டுகிறேன்.

வா.சா.ஆ.1 – 07.07.2019 தேதியிட்ட எனக்கு பிரதிவாதி எழுதிக்கொடுத்த பிராமிசரி நோட் சான்று நகல்

வா.சா.ஆ.2 – 14.10.2019 தேதியிட்ட எனது பெயருக்கு பிரதிவாதி கொடுத்தத ரூ.9லட்சத்திற்கான காசோலை சான்று நகல்

வா.சா.ஆ.3 – 16.10.2019 தேதியிட்ட வங்கியில் இருந்து திருப்பப்பட்ட ரிட்டன் மெமோ சான்று நகல்

வா.சா.ஆ.4 –16.10.2019 தேதியிட்ட பிரதிவாதிக்கு அனுப்பி அறிவிப்பின் சான்று நகல்

வா.சா.ஆ.5 –18.10.2019 தேதியிட்ட பிரதிவாதி மேற்படி அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை சான்று நகல்

வா.சா.ஆ. 6 – 22.10.2019 தேதியிட்ட பிரதிவாதி மேற்படி அறிவிப்பை அலுவலக

முகவரியில் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை சான்று நகல்

வா.சா.ஆ.7 – எனது வங்கி கணக்கு பதிவேடு சான்று நகல்

வா.சா.ஆ.8 – 14.11.2019 தேதியிட்ட STC No.701/2019 புகாரின் சான்று நகல்

வா.சா.ஆ.9 –16.11.2022 தேதி நான் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த ரசீது

வா.சா.ஆ.10 – 22.11.2022 தேதியிட்ட ரூ.75000/–பணம் பெற்றதற்கான ரசீது

வா.சா.ஆ.11 – 22.11.2022 தேதியிட்ட 12.49 AM VK – CBSSBI ரசீது

வா.சா.ஆ.12 – 01.03.2022 தேதியிட்ட 01.11.2022 முதல் 30.11.2022 வரை ரூ.75000 காட்டிய நகல்

வா.சா.ஆ.13 – 22.11.2022 வாதி பிரதிவாதிகளுக்குள் ஏற்பட்ட உறுதிமொழி ஆவணம் சான்று நகல்

வா.சா.ஆ.14 – 20.12.2022 தேதியிட்ட CC No.1/2015 வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட பதில் உரை சான்று நகல்

வா.சா.ஆ.15 – 12.11.2022 தேதியிட்ட லோக் அதாலத் அவார்ட் சான்று நகல்

வா.சா.ஆ.16 – 14.02.2025 தேதியிட்ட தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் பெறப்பட்ட வங்கி செல்லான் மற்றும் எனது Statement of Accounts. சான்று நகல்

வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.6 வரையிலான ஆவணங்கள் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது.

தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

Sd/–C.Rajalingom.
4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.